திரு. ரா. ரா. முனுசாமி: தற்போது இல்லை என்று சொன்னார்கள் ஆனால் பொது மக்களும், பார்வையாளர்களும், மற்ற மாநிலங்களில் இருந்து சாத்தனூர் டாமைப் பார்க்க வருகிறவர்களும் தங்குவதற்கு இட வசதி இல்லை. எனவே அதை உத்தேசித்து அத்திட்டத்தில் அதைச் சேர்க்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சாத்தனூர் பகுதியில் அணைக்கட்டு விடுதி ஒன்று ஏற்கெனவே இருக்கிறது. விருந்தினர் விடுதிகள் மூன்று உள் ளன. இவையில்லாமல் சீர் செய்யாத விடுதிகளும் இருக்கின்றன. ஆகவே, தற்போது கட்டவேண்டிய அவசியம் இல்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

*225 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மாயூரம் நகரில் பொதுப்பணித்துறையின் சார்பில் பயணிகள் விடுதி ஒன்று கட்டப்பட்டு வருகின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

*226 வினா—திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

மேட்டுப்பாளையத்தில் பொதுப்பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மேட்டுப்பாளையத்தில் கூடுதலா பொதுப் பணித்துறை ஆய்வு மாளிகை கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசின் கவனிப்பில் உள்ளது.

Assignment of land in Arcotkuppam.

* 227 *Q.*—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that lands were given to "Anna Anbu Illam" and "Kalaignar Karunanidhi Kai Thozhil Koodam" in Arcotkuppam village, Tiruttani taluk; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ), (இ). "கலைஞர் கருணாநிதி தொழில் கூடம்" என்ற பெயரில் சங்கமெதுவும் இல்லை; அதற்கு நிலம் எதுவும் கொடுக்கப்படவுமில்லை.